உ

அம்பாள் துணை.

---

# வைசியகுல - - -

# - - - சிந்தாமணி

ம. தா. இரத்தினவேல் செட்டியார்,

திருவல்லிக்கேணி.

4592C
N17
59623

செப்பனிடுபவர் பெயர்

நவம்பர் 1996

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்

மார்ச் 1997

சரிபார்க்கும் மு.கா.எ. கையொப்பம்

20/4/97

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்

26/2/97

உ

அம்பாள் துணை.

# வைசியகுல சிந்தாமணி.

# (VAISYAKULA CHINTAMANI)

இது

திருமயிலை ம-ள-ள-ஸ்ரீ, தாமோதர செட்டியார் அவர்கள்

குமாரரும், சுவாமி நித்தியானந்த அவர்களின்

மாணவருமாகிய

ம. கா. இரத்தினவேல் செட்டியாரவர்களால்

வரையப்பட்டது.

T. M. PRESS, PALLAVARAM.

1917.



ம. தா. இரத்தினவேல் செட்டியார்.

# முகவுரை.

"வைசியகுல சிந்தாமணி" என்னும் இச்சிறுநூல் வைசியகுல சிகாமணிகள் அனைவரும் கல்வி நிறைந்தவர்களாய் விளங்குவதற்குங் கல்வியை விர்த்தி செய்வதற்குமுரிய சாதனங்களை எடுத்துரைப்பது.

இப்புத்தகத்தைக் கண்ணுறும் நமது மரபினர் ஒவ்வொருவரும் தயவு செய்து இச்சிறுவன்மீது அன்பு பாராட்டி, தொடக்கத்திலிருந்து கடைசிவரையில் ஊக்கத்தோடு, எழுதியுள்ள விஷயங்களெல்லாவற்றையும் ஒவ்வொன்றாக முன்னுக்குப்பின் மறப்பென்பதில்லாமல் பொதுநோக்கோடு வாசித்து இதை இயற்றியவரின் உண்மையான கருத்து இன்னதென்று தீர்மானித்து அவருடைய ஊக்கமும் நல்லெண்ணமும் வீணாகாமல் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதை மனதிற் சிந்தித்து முயன்றால் நாம் மேன்மையடையலாம்.

உ

அம்பாள் துணை.

# வைசியகுல சிந்தாமணி.

## காப்பு.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

## மகான்கள் துதி.

சொல்லு ணர்ந்து முடிபினைத் தானுணர்
நல்ல வின்ப நடுநிலை நிற்பவர்
வல்ல வாவர் யாவரே யாயினும்
தொல்லை தீர்பதந் தூற்றி யுளங்கொள்வாம்.

## பரசிவ துதி.

மோனமுமாய் மூன்றெழுத்தாய் முடிந்தான் தன்னை
மூன்றெழுத்தின் முச்சுடராய் முளைத்தான் தன்னை
தானமதா லைந்தெழுத்தாய் தடித்தான் தன்னை
தன்னுருவே சகலமுமாய்த் தரித்தான் தன்னை
தீனர்களாய் நிற்பவர்க்கா தினன் தன்னை
திகழ்ஞான சத்திக்கு மெட்டான் தன்னை
ஈனமற்றோர் மனக்கோயி லிருப்பான் தன்னை
யேற்றுத நாளெல்லா மிழிவா நாளே.

## அவையடக்கம்

சாலவென் னறிவா லொன்றுஞ் சாற்றவு மில்லை முன்னோர்
நூலிய லவர்சொல் ஞான சாரத்தை யெடுத்தி ணைத்து
சீலமார் பொருள்கண் டோர்ந்து ஜெகத்தெம ருஜ்ஜீ விக்க
கோலமாய்த் தொகுத்த நூலின் குணமதைக் கொள்வர் தமே.

## நூல் வரலாறு.

சீர்பெருகு வைசியரெனுங் குலத்திலக மாண்பர்களே
செப்பக் கேண்மின்
பார்புகழு மெமதுகுரு பரம்பரையை யனுதினமும்
பாடிப் போற்றி
வார்பாவு வைசியகுல சிந்தாம ணியெனுநூல்
வரைந்திட் டேன்யான்
சேர்பாவி தன்கருத்தை யாராய்ந்து நிலைநிறுத்த
நிற்பார் தக்கோர்.

ஸ்வயம் ஸ்ரீவேதமூர்த்தி ஞானசிவாச்சாரியார் மடம் முள்ளடம் ஸ்வாமிகள் சந்நிதானத்தை ஆதினமாகக்கொண்டவரும், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வகுப்பில் மூன்றாவது வகுப்பினருமாகிய வைசியர் அல்லது வணிகரென்று வழங்கும் எமது வகுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் விஷயங்கள் என்னவென்றால், நமதுவகுப்பில் ஒவ்வொரு கிராமத்திலும் பெரியதனம் காரியஸ்தரென்று நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்திய ஏற்பாட்டின்படி தற்காலத்திலும் அந்த ஏற்பாடுகளை அனுசரித்து வருவது நமது மரபினரைச் சீர்திருத்தம் செய்யும் பொருட்டல்லவா? ஒவ்வொரு கிராமங்களிலும் தனவான்களாகவும் விவேகிகளாகவும் பார்த்து, செட்டியாரென்றும் காரியஸ்தரென்றும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவர்கள் நமது குடிகள் வீட்டில் நன்மை தீமை என்கிற விவகாரங்கள் நடக்கும்போது பொதுதர்மத்திற்சேரவேண்டிய தலைக்கட்டுப்பணம், சாமியார்பணம் இன்னுஞ்சில தர்மவிஷயமாக வாங்கவேண்டிய பணங்களைப்பலத்காரத்துடன் வாங்கித்தர்மங்கள் செய்கிறார்— அந்தத் தர்மமானது நமது மரபைச் சீர்படுத்துவதாக

வும் பொதுநன்மையைக் குறித்துச் செய்வதாகவும் காணப்படவில்லை. இவ்விஷயத்தை நம் வகுப்பினராகிய ஒவ்வொரு கிராமவாசிகளும் நன்கு கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்காவிட்டால் "இனம் இனத்தைக்காக்கும் வேலிபயிரைக்காக்கும்" என்கிற வாக்கியம் வியர்த்தமாய்விடும். இதை யனுசரித்தே ஒவ்வொரு மதஸ்தரும் தம்தம் இனத்தைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். நமது வகுப்பில் அனேக பிள்ளைகள் சீர்திருத்தமில்லாமல் சிறுவயதிலேயே பணம்சம்பாதிக்கவிடுவதால் அப்பிள்ளைகள் கையினில் துட்டு நடமாடுகிறதினால் பலவித துர்நடத்தைக்கு ஆளாகி விடுகிறார்கள். இதற்குக் காரண மென்னவென்று யோசிக்குங்காலத்தில் அது அனைவருக்கும் நன்கு விளங்கக்கூடியதே. தற்போது தாய்தந்தையர்கள் மிகுதியும் ஏழ்மையடைந்திருப்பதால் அப்பிள்ளைகளைச் சீர்படுத்த யோக்கியதையில்லாமல் அவர்களுடைய கஷ்ட நிலைமையினால் அப்பிள்ளைகளைக் கூலி வேலைக்கும், இன்னும் பலவித கஷ்டமான தொழில்களுக்கும் விட்டுப் பணம் சம்பாதிக்கும்படி செய்கிறார்கள். இவற்றால் அப்பிள்ளைகள் வாழ்நாள் முழுதும் கெட்டுக் கஷ்டத்தில் மூழ்கிவிடுகிறார்கள். இவர்களுக்குப் பணமே முக்கியமாக இருந்தாலும், அப்பிள்ளைகள் சீர்படுவதற்கு முக்கியமான கல்வி கேள்விகளில் வல்லவராக்கவேண்டும். "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்னும் வாக்கியத்திற்கிணங்க அவர்கள் நல்லொழுக்கமும் நாகரிகமுமடைவதற்கு யோக்கியதையாயிருக்கும். செல்வத்தைப்பார்க்கினும் கல்வியே முக்கியமாக விவேகத்தை விளக்கிக்காட்டுவ

தற்கு ஆதாரவாயிருக்கின்றபடியால், நமது வகுப்பினராகிய கிராமவாசிகள் இதைச் சீர்தூக்கி நடப்பிக்க அவசியமாகின்றது.

“சுடர்விளக் காயினுந் தூண்டுகோ லொன்று வேண்டும்” என்பதுபோல நமது வகுப்பினர் புத்திசாலிகளாகத் தர்மவிஷயத்தில் தவறாதபடி நடக்கிறவர்களாக இருந்தும் மேற்கூறியவைகளைக் கவனிக்காதிருப்பதற்குக் காரணம் தூண்டுதலில்லாமையேயாம். நமது மரபினராகிய தென்னாட்டுவாசிகள் எழ்மையடைந்து கஷ்டார்த்த ஜீவனம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் இப்படி இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசிக்கும் பக்ஷத்தில் அனேகருக்குக் கல்வியினுடைய தர்மமில்லாதபோனபடியால் இப்படி பரிதவிக்கின்றதாகத் தெரிகின்றது. இவைகளை நம்மரபினராகிய கிராமவாசிகளும் குடிகளும் சீர்தூக்கிப் பார்த்து ஒவ்வொரு கிராமங்களிலும் அவரவர் சக்திக்கேற்றபடி ஒருபாடசாலை நியமித்து அந்தந்தக் கிராமங்களில் ஏற்படும் தர்மங்களை வசூலித்துத் தங்களால் ஏற்படும் தர்மங்களில் முக்கியமான தருமம் இதுவும் ஒன்றாக நினைத்து, அப்பாடசாலைக்கு வேண்டிய செலவுகளை நடப்பித்து நாளுக்கு நாள் விருத்திசெய்யும் மார்க்கங்களைச் செய்விக்கும்பொருட்டு ஒவ்வொரு கிராமவாசிகளும் குலாபிமானங்கொண்டு முயற்சித்துத் தங்களுடைய வகுப்பினரைப் பாதுகாக்கவேண்டியது மிகவும் அவசியம். “செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்” என்னும் வாக்கியத்திற்கிணங்க நம்மால் பொருள்சகாயம் செய்யமுடியாவிட்டாலும் பிறரால் கவரத்தகாத கல்விப்பொருளை

நமது பிள்ளைகளுக்கும் பாமினர் பிள்ளைகளுக்கும் கொடுக்கும் பொருட்டு நம்மால் கூடியான சகாயஞ் செய்து அப்பிள்ளைகளை நாம் பாதுகாக்கவேண்டியது அவசியம். அப்படி நாம் பாதுகாக்காவிட்டால் நமது சமூக மிகுதியும் கேவலநிலையில் வந்துவிடும். நாம் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு வகுப்பில் மூன்றாவது வைசியகுல சிகாமணிகளாக விருந்தும் நம்மைக் கேவலப்படுத்திப் பேசுவதற்குக் காரணமென்னவென்று யோசிக்கும் பக்ஷத்தில் நம வகுப்பாருக்குப் போதுமான கல்வி கேள்வியில்லாமையே. "கல்லாவொருவன் குலநலம்பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்கிற வாக்கியத்திற் கிணங்க, கல்வியின் அருமையானது நமது மரபாருக்குச் சரிவரவில்லாமையை நோக்கியே, நமது காருண்ய முன்ன மடம் சந்நிதானம் மஹந்து அவர்கள், சென்ற சிலமாதங்களுக்குமுன் சென்னை ஆலிகேவுனி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மகாநாடு கூட்டி சேர்ந்து நமது மரபைக்குறித்து, சமஸ்கிருத வேதங்களிலிருப்பதை நாமெல்லோரும் எளிதிலுணருமாறு தமிழில் 'வைசிய புராணம்' அச்சிடுவதாக ஏற்பாடு செய்திருக்கிறார். இதுவும் நமது பெரியோர் செய்த புண்ணியமேயாகும். நூல் வெளியான பின்னர், யாதோ கல்வி கேள்வி நிறைந்த பாண்டித்யமுடையவர்கள் மாத்திரம் அதைக்கையாளுவதற்கு முடியுமேயன்றி, சாமான்யமாக நமது வகுப்பில் யாவரும் தற்சமயம் கையாள முடியாது. ஏனெனில், கல்வியுள்ளவர்கள் நூற்றில் இரண்டு மூன்றுபேரிருப்பார்களேயொழிய அதிகமிரார். ஆகவே தற்போது இச்சாஸ்திரம் பிர

காசிக்காவிட்டாலும் நம் முயற்சியினாலும், சரீரகஷ்டத்தினாலும், பலரால் பொருள்சேர்க்கும் சகாயத்தினாலும் கல்வியை விருத்திசெய்யும்படிக்குத் தக்க ஏற்பாடு செய்விப்பீர்களாகில் கூடியசீக்கிரத்தில் இனி வரும் பிள்ளைகளாயினும் கல்வியில் தேர்ந்து இச்சாஸ்திரத்தைக் கையாளுங் காலங்களில் நமது மரபு எவ்வித உத்க்ருஷ்டமான அளவில் நிற்குமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன். அதன்றியும் ஒவ்வொரு ஜாதியாரும் நம்மையிழிவாகப் பேசுவதால் நம்மவருக்குக் கேவலத்தையுண்டுபண்ணிக்கொண்டு வருகிறது. ஆகையினால் கல்வியை விருத்திசெய்ய முயலுங்கள்.

"எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" எனவும்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" எனவும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" எனவும்,

கூறியிருக்கின்றபடி கல்வி கேள்வியானவை இகபர சாதனங்களுக்கு முக்கியமாகக் காண்கின்றன. இதை அனுசரித்தே நமது முன்னோர்கள் நாம் சீர்பெறும்பொருட்டு அநேக சாஸ்திரங்களைச் செய்திருக்கின்றனர். அதன்றியும் தற்கால அனுபோகத்தைப்பற்றிச் சில பாக்களை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுகிறேன்; கவனிக்கவும்.

"மன்னனு மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன் — மன்னனுக்குத்
தன்தேச மல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு"

என்கிற வாக்கியத்தினால் செல்வமானது கூடிய சீக்கிரத்தில் அழியத்தக்கதென்று வெளியாகிறபடியால்

கற்றோரைச்சிறந்தவர்களாக எண்ணுவது பெரியோர் கொள்கை. இன்னமும் கல்விப்பொருளைச் சிறப்பித்துக் கூறுகின்ற பாக்களால்ஒவ்வொருவரும் கல்வியின் பெருமையைத் தெரிந்துகொள்ளலாம்.

"புனையுறுங் கல்வியாம் பொருளைப் படைத்திடிற்
புவனமெல் லாந்துதிக்கும்
பொன்போல வேறொருவர் கைதனி லடங்காது
போற்றிப் புதைக்கொணாது
வினைமருவு திருடருங் காணுமே லெபற
விரும்பப் படாத செல்வம்
மிக்காய மதுரமொடு கவிமாரி பொழிகின்ற
மேகசஞ் சார மிதனை
மனையிலொரு வற்கொருவர் செலவிடக் கூடாது
மனமாளிகைப் பெட்டியுள்
வைக்கின்ற மாமணிகள் மற்றொருவ ரிச்சித்து
வௌவப்படாது கண்டாய்" என்றும்,

"கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்வியிலை பெற்ற பொருளாங்
கனலினா லுருகாது புனலினாற் கரையாது
கள்ளராற் றிருடொணாது
திடமான ராஜாதி ராஜரா லும்மதை
தீண்டிச் சிதைக்கொணாது
செயன்மிக்க மாதராற் சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவாதாங்
கடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
யளவிடவும் முடியாதுகாண்
அப்பொரு ளினைப்பெறா ரிப்புவியி லலைகின்ற
அற்பருறு பயனென்கொலோ" என்றும்,

இரண்டு பாக்களில் கல்வியானது எப்போதும் அழியாப் பொருளென்று விளங்கக் கிடக்கின்றன.

ஆனபடியால் நாம் உலகத்தில் மனிதராகப் பிறந்து சாஸ்திர விசாரணை யில்லாமல் போவோமானால் நாம் மனிதராய்ப் பிறந்ததற்கு இலக்ஷண மின்னதென்று தெரிந்துகொள்வதற்கு யோக்யதை யில்லாமல் போய் விடும். ஆகையினால் நாம் சாஸ்திர விசாரணை செய்ய வேண்டிய தவசியம். இக்கருத்தை நமது மூதாட்டியார் அருளிய வாக்கியத்தை நாம் கவனிக்க நன்கு விளங்கும்.

"அரிதுஅரிதுமானிடராதலரிது—மானிடராயினுங்
கூன்குருடுசெவிடுபேடுநீங்கிப்பிறத்தலரிது
பேடுநீங்கிப்பிறந்தகாலையும்
ஞானமுங்கல்வியும்நயத்தலரிது
ஞானமுங்கல்வியுநயந்தகாலையும்
தானமும்தவமும்தான்செயலரிது
தானமும்தவமும்தான்செய்வராயின்
வானவர்நாடுவழிதிறந்திடுமே."

"ஒப்பஉரைப்பதுசெப்பாதுமறை
தப்பாதுன்னுரையொப்பாது
செப்பியநூலுக்குக்கப்பியபோர்வை
யிப்பியேபாரதிநானெப்பெண்ணே."

"கூரார் விவேகமென் கொடியா வஞ்ஞானக்
காராருங் காட்டைக் களைந்தெரித்து—சீர்ஞான
தீபங்கைக் கொண்டார் திகழ்மூர்த்தி தானமைந்தே
தாபமறும் மானிடரே தான்."

ஆகவே சாஸ்திர விசாரணை ஒவ்வொருவருக்கும் நிறைந்திருக்கவேண்டிய தவசியமென்று அறிகிறோம். கல்வியினாலடையும் பிரயோசன மென்னவென்று யோசிப்போமானால், கல்வி கற்ற ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் இகபரசாதனங்களைத் தேடிக்கொள்வ

தற்கு முக்கிய ஆதரவாயிருக்கின்றதென்பதை விளக்க நம்மூதாட்டியார் தெரிவித்துள்ள பாட்டை நான் முன்னமே காட்டியிருக்கின்றேன்.

("அரிது அரிது மானிடராதலரிது")

அதன்றியும் கல்வியினால் தாம் இகபரசாதனங்களைத் தேடிக்கொள்வதுமல்லாமல் தம்மைப்போல் இருக்கப்பட்ட மானுடராயுள்ள ஒவ்வொருவரும் சீர்படவேண்டிய நிமித்தம் உழைப்பதற்கும் ஆதரவாகின்றார். இல்லையென்னிலோ நமது முன்னோர்கள் நாம் சீர்படவேண்டிய நிமித்தம், அநேக சாஸ்திரங்களைச் செய்தும், பொதுநன்மையான காரியங்களுக்கு உழைத்தும், பலவித தர்மங்களை ஸ்தாபிதப் படுத்தி வைத்திருப்பதை நாம் பார்த்தும், கேள்விப் பட்டும், சாஸ்திரங்கள் மூலமாகவும், யுக்தி அநுபோகத்தாலும் உண்மையென காண்கிறோம். இதை நோக்கி நாம் ஏன் இம்மாதிரியான சிரத்தை யெடுக்கக்கூடாது. "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்கிறபடி நாம் செய்யும் முயற்சியால் ஒவ்வொரு காரியமும் கைகூடும். தற்போது காருண்யமுள்ள கவர்ன்மெண்டார் சிறுபிள்ளைகள் படிப்பில்லாமலும் தாய் தந்தையருக் கடங்காமலும், சீரழிந்து போகின்ற பிள்ளைகளுக்கு உணவு வடிப்பு முதல் கல்வியும் கைத்தொழிலும் கற்பித்து வருவதை நாம் கண்காக்ஷியாகப் பார்க்கிறோம். அம்மாதிரி உண்டோவென்று சந்தேகங் கொள்ளவேண்டாம். தற்போது தெரியாதவர்கள் சென்னைத் தாண்டவராயன் பேட்டையில் பள்ளிக்கூடம் வைத்து நடத்திவருவதை நேரில்போய் பார்க்கலாம் அதுவுமன்றி வன்னியசங்க பாடசாலையென்று

அநேக விடங்களில் பார்க்கிறோம். அதை ஸ்தாபிதம் செய்தவர், கோபால நாயகர் ஒருவரே. இப்போது ...ரு எவ்வளவு பிரகாசமாக நடந்து வருவதாம் தவிர ...ன்னை டவுனில் பச்சையப்பன் காலேஜ் ஒன்றிருப்பதை நாம் பார்க்கவில்லையா? அந்தக் காலேஜ் ம-ா-ா-ஸ்ரீ, பச்சையப்ப முதலியா ரவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு அன்னவருடைய சம்பாதனைகளை அதற்கு மூலதனமாக வைத்து தன்னுடைய ஜீவதிசைவரைக்கும் மேல்படி காலேஜிக்கு வேண்டுமான ஆதரவு தேடிவைத்தார். அதற்குப் பின் அநேக புண்ணியவான்கள் முன்னின்று மேல்படி காலேஜிக்கு அநேக பொருள் சேகரித்து வைத்தனர். தற்போதும் அநேக தனவான்கள் தாம் சம்பாதித்த திரவியங்களில் சிலவற்றை மேல்படி காலேஜிக்குத் தானமாக எழுதி வைக்கிறார். அதையும் நாம் கண்காக்ஷியாகப் பார்த்தும், கேள்விப் பட்டும் இருக்கின்றோம். இப்படி இருக்க நாம் இவ்வித விவகாரங்களுக்கு முயலாமல் போனபடியினா லல்லவோ நமது தேசமானது கல்வியிற் குறைந்து நியாய மனியாயங்கள் இன்னதென்ன பகுத்தறியும் உணர்வில்லாமல் பணந்தேடுவதே முக்கிய காரியமெனநினைந்து, தேடியதைப்பொது நன்மைக்காவது தர்மத்திற்காவது செலவிட மனம் வாராமலிருக்கின்றனர். ஒவ்வொரு கிராமங்களிலும் பெரியதனம் காரியஸ்தர்களாக இருக்கின்றவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களில் கோயில் உற்சவாதி கைங்கர்யத்திற்கும் சுரு காணிக்கைகளுக்கும் வசூலிப்பதற்குக் கூட்டம் போட்டு இவர்கள் படும்பாடு திண்டாட்டமாய் முடிகின்றது. ஏனெனில், கல்வியுடையவரும்

புத்திசாலிகளாக இருக்கப் பட்டவரும் கொடுக்க வேண்டிய தவசிய மென்று மகா பிரியத்தோடு கொடுக்கிறார்கள். கல்வியுங் கேள்வியு மில்லாத சாமான்யராய எம்போன்றவர்கள் அதிருப்தியோடு கொடுத்துப் பின்புறங்கூறுகிறார்கள். இது ஒவ்வொரு கிராமங்களிலும் அநுபவித்துக் கொண்டுவரும் விஷயமே. அவ்விதமாகக் கொடுக்கும் பணத்தைக் கொண்டு சங்கித தர்மமும் உற்சவாதிகள் செய்வதும் உசிதமல்லவென்பது பெரியோர் கொள்கை. அதன்றியும் நாம் செலுத்துங் குரு காணிக்கை எவ்விதமாக நமது ஆசாரியருக்குப் பொருந்தியிருப்ப தென்றால் சிற்றுர்க்க பாவினத்திற்கு ஒப்பா யிருக்கின்றதே யொழிய வேறில்லை.

> "காணைக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
> மாவெனைக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
> னென்னெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
> அன்பில்லா விட்ட வமுது."

> "ஒப்புடன் முகம லர்ந்து உபசரித் துண்மைபேசி
> உப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகும்
> முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராகில்
> கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே."

வெறுப்போடு வழங்கும் குரு காணிக்கை இவ்விதமாய் முடிகிறது. ஏனெனில் இவர்களுக்குக் கல்வி கேள்வியில்லாத காரணமே. ஒருவருக்குக் கல்வியும் கேள்வியு மிருந்தால்தான் மாதா பிதா தமையன் குரு தெய்வமென்கிற இவர்களிடத்தில் மரியாதையோடு தான் நடந்து கொள்வதுந் தவிர முப்பத்திரண்டு

தர்மங்களையும் தவருமல் நடப்பிப்பார். இதற்குப் பிரமாணம் :

" தன்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தர்மங்கள் செய்துவரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப்படுதலும்
மக்குமதி யிலாததன் தந்தைதாய் குருமொழி
மாருது வழிபடுதலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்
இக்கிர குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ் சன்மார்க்கமு
மிவையெலா முடையவன் புதல்வனு மவனையே
யீன்றவன் புண்யவானும்."

" தர்மதா னஞ்செய்ய மனதாசை கொண்டவன்
தானுமொரு தேவபுருஷன்
சகலருக் குங்கீழ் வணங்கியே வாழ்பவன்
தானுமொரு தேவபுருஷன்
கர்மமா லங்களுக் கஞ்சியே வாழ்பவன்
தாரணியில் தேவபுருஷன்
சதிபெறு வருகினுந் தெய்வத்தை நம்பினேன்
கருதிலொரு தேவபுருஷன்
வட்டிவிட் டேழைகள் கஷ்டமது தீர்ப்போன்
மகாதேவ புருஷனென்பார்
வர்மமென் றுமைலே யெல்லோர்க்கு நலமெண்ணி
வாழ்பவன் தேவபுருஷன்"

என்று மேல்கூறிய வாக்கியங்களின்படி நன்மக்களுக்குப் புண்ணியவசத்தினுல் பொருள் கிடைக்க வேண்டும். அப்படி கிடைத்த பொருளை அநுபவிக்குந் திறத்தைக் கீழ்வரும் பாட்டினுல் ஒவ்வொருவரும்

தெரிந்துகொள்ளலாம். இப்பாட்டை அவசியம் கவனிக்க வேண்டியது.

“புண்ணிய க்ஷேத்திரத் செல்வமது வரவேண்டும்
பொருளோ டீட்டிக்கவேண்டும்
புத்தியுட னதுகொண்டு தருமமே செய்து
போதகம் வளர்க்க வேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த்ரா பரண
முடனித் தரிக்கவேண்டும்
உற்றபெரி யோர்களின் நாதுலர்க் குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணிலெரு தர்மங்கள் செயவேண்டு முயர்யோக
வழிதேட வேண்டுமென்றே
விரித் துரைத்துவைத் தியோக போகனே
மார்க்கமறி யாக்குருடா.”

“ஜயாத போகனே மார்க்கமறியாக் குருடா” என்ற இப்பாட்டின் கருத்தை நாம் கவனித்து நடக்க முயலவேண்டும். இப்பாட்டை விவரித்தி லிதற்காகவே யெடுத்துக் காட்ட வேண்டிய தவசியமாயிறது. இதை நம் வாலிபர்களாகிய புண்ணியவான்களும் தனவான்களும் அறிந்து நடப்பார்களாகில் நமது மாபெரும் சீக்கிரத்தில் முன்னுக்கு வருவதாக்தவிர பலனால் புகழும்படிக்கும் பிரகாசிக்கும். இப்பாட்டின் கருத்தைக் ஆழ்ந்து கவனிக்கில் உண்மை விளங்கும்.

“வாலிபத் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்கவேண்டும்
ஆலைடத் திரித்துபொருள் தேடவேண் டுந்தேடி
அறமது செய்யவேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்

செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டுங்கொண்டு
தியாகங் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதர்ம நாட்டவேண்டு நாட்டி
நன்றாய் நடக்கவேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னாலுமிகு பத்திவேண்டும்."

இன்னமும் நமது பிள்ளைகளையும் மாடார் பிள்ளைகளையும் நாம் சிறுபோதில் கல்வி கற்பிக்காதபடியால் அப்பிள்ளைகள் நம்முடைய சொல்லுக்கு அடங்காதவர்களாகி, நமக்கும் பந்துகளுக்கும் இன்னு மநேகருக்கும் விரோதமான காரியங்களைச் செய்வதற்கு ஆளாய் விடுகிறார்கள். இவைகளை யனுசரித்து அப் பிள்ளைகளுக்கு யாதொரு இடையூறுகளும் நேரிடாதவண்ணம் காக்கவேண்டும். இப்பாட்டில் கூறியதை நாம் கவனித்தால் அப் பிள்ளைகள் கெடுவதற்குக் கொஞ்சமேனும் வழியில்லை. ஆகவே "இளமையிற்கல்" என்கிற வாக்கியத்தைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

"மைந்தருக் கிளமையிற் கல்வியும் பூசையும்
மதிவரச் செய்யாமையும்
மனைவியைச் சிறுபோது தண்டித் தடக்கியே
வசப்படச் செய்யாமையும்
வந்தவொரு பிணிக்கு மருந்துகளறிந்தே
வைத்தியஞ் செய்யாமையும்
வைத்தபயி ருக்கு பராமரித் திளமையில்
விளைகாவல் வையாமையும்
அந்தியகா லம்வரு முன்னமே தருமங்கள்
செய்துகதி தேடாமையும்
அந்தந்த தருணமது தப்பினா லப்பனே
அசாத்தியமென் பார்கள் கண்டாய்."

என்கிற வாக்கியத்தின்படி நாம் சரிவர நடப்பிக் காத போனபடியாலல்லவோ "வளர்த்தகிடா கையில் பாயு" மென்பதுபோல் ருஷ்யுமேயன்றி அப்பிள்ளை கள் சீரழிவதற்கு போக்யதை யில்லாமல் நம் மனை வருக்கும் கஷ்டத்தைக் கொடுக்க ஆளாய் விடுகிறார் கள். இவைகளை சீர்திருத்தி நடப்பிக்கும் மார்க்கங்களை அவசியம் செய்யவேண்டியது. அப்படி நாம் செய்யா விட்டால் அறிவீனத்தால் அப்பிள்ளைகள் செய்கின்ற குற்றத்திற்கு ஆளாகி விடுகிறதும் அவிர குலமும் ஈனத்வமடையும். இதற்கு திருஷ்டாந்தமாகக் கீழ் வரும் பாட்டை கவனிக்க விளங்கும்.

"மண்டலத் தோர்கள் செய்த பாவமன் னவரைச் சேரும்
தெண்டிகன் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேரும் ரு
தொண்டர்கள் செய்த தோஷந் தொடர்ந்துதங் குருவைச் சே
கண்டன் மொழியாள் செய்த கன்மமுங் கணவர்க் காமே"

என்று கூறியதில் யாதொரு சந்தேகமு மில்லை. இதை ஆழ்ந்த கருத்தோடு மேற்கூறிய விஷயங்களைப் பொதுவாக்காக நாம் கவனிக்கில் நன்கு விளங்கும். இதற்கு யெயினில், என் சகோதரர்களே இன்னமும் நமது பாரமானது கூடிய சீக்கிரத்தில் சீர் அழிந்து போய்விடு மென்பது திண்ணம். இப்படி நாம் சொல் வதினால் சிலருக்கு எவ்விதம் நமது சீக்கிரத்தில் சீரழிந்துவிடும் என்கிற சந்தை யாக்கும். திருஷ் டாந்தமாக விதைதனை விதைத்த ஒருவன் ஜக்கத் தோடு அதற்கு வேண்டிய முயற்சியைத் தேடாவிட் டால் அந்தப் பயிரானது எப்படி விருத்தி யடையா மல் போய்விடுமோ அதைப்போலவே நமது மரபில் உதித்த பிள்ளைகளே, நாமானது தாம் தந்தையாக

ளாவது அப்பிள்ளைகளைக் கவனிக்காவிட்[illegible]
கள் எப்படி விர்த்தியடைவர். (இங்கு எப்[illegible]
கவனிப்போம்.) சில நூற்றாண்டுக்கு முன்[illegible]
மரபானது இருந்தவிடமே புலப்படாமல் [illegible]
விருந்தது. ஏனெனில் அப்போது ராஜரீகம் [illegible]
வர்களால் ஏற்பட்ட இம்சையால் சிதறி[illegible]
ஆசாரங்கள் தவறுண்டிருந்தவர்களை நமது ஸ்ரீ [illegible]
சிவாச்சாரியார் காலத்தில் இருந்த மா[illegible]
புண்ணியவான்கள் மேற்படி சுவாமிகளைத் [illegible]
மாகக் கொண்டு, அன்னவர் மூலமாக [illegible]
ஆசார சீர்திருத்தமும் இதோபதேசமும் [illegible]
நம்மை முன்னுக்குக் கொண்டுவருவதற்கு [illegible]
னனுபவித்த கஷ்டம் அதிகம் அதிகமே. [illegible]
அப்போதிருந்த பிராமணர்கள் நம்மவர்[illegible]
மையிட்டு ஜாதிப்பிருஷ்டம் செய்ய நினைத்[illegible]
ஞானசாரியார் அதற்காக வேண்டி காசி[illegible]
குருவாகிய சங்கராசாரியரிடம் சென்று [illegible]
நியாயங்களாலும், வேதசாஸ்திரங்களாலும் [illegible]
வங்களாலும் இவர்தான் வைசியரென்று [illegible]
அன்னவரால் முன்னிருந்த கொடி குடை [illegible]
பல்லக்கு முத்திரை முதலாகிய தசாங்க [illegible]
யும் பெற்று, நமது சுவாமிகளை இதுவரையிலும் [illegible]
பரையாக, அன்னவருடைய பீடமே ஆசாரிய பீட-
மாக வந்துகொண்டிருக்கிறது. தற்போது [illegible]
என்பது வெகு அருமையாய் சேர்ந்துவருவதால் [illegible]
புத்தகம் ஆரம்பத்திலிருந்து தெரிவித்தபடி [illegible]
பானது குறையவே விவேகமென்பதும் [illegible]
குறைந்து வருவதோடு ஆசார சீர்திருத்[illegible]

கெட்டு ஜாதியின் கிரமமானது இன்னதென்று விளங்காமல் வருவது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமே. ஆகவே நமது முன்னோர்கள் கஷ்டம் வியர்த்தமாகாவண்ணமும் நமது மரபு ஈனஸ்திதி யடையாவண்ணமும் நம்மவரில் புத்திசாலிகளாக விருக்கப்பட்டவர் மிகுதியும் கவனிக்கவேண்டிய தவசியம். அதன்றியும் நம்மவரில் சிலர் நினைப்பதென்னவென்றால் ஊரை யொன்றுகூட்ட யாரால் முடியும். நாம் சம்பாதிப்பது பிள்ளையையும் பெண்ஜாதியையும் காப்பாற்றுவதே கஷ்டமாயிருக்கிறது. இந்தக் காரியங்களுக்குத் தலையிட யாரால் முடியும். யாராவது வீணராயிருந்தால் அவர்கள் இதற்காகப் பிரயாசைபடலாமென்றெண்ணக்கூடும். அப்படி நினைப்பது சுத்த பிசகு. இம்மாதிரி நினைப்பவர் மிகவும் சண்டாளரென்று ஆன்றோர்களால் சொல்லப்படுவார்களேயொழிய வேறில்லை. அந்தோ பரிதாபம். இப்படி நினைப்பவர் அடியிற்கண்ட பாட்டைப் பார்த்து ஆழ்ந்து யோசிப்பாராகில் இலக்ஷணம் இன்னதென விளங்கும்.

அகவல்.

" தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோ ரென்னான் இளையோ ரென்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப இவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ
இளமையு நில்லா யாக்கையு நில்லா

புத்தேன் உலகம் புதல்வரும் தாரார்
மிக்கால் லறமே வழித்துணை யாவது"

என்கிறபடி தபசிகளென்றாவது தனவந்தரென்றாவது இப்போது தான் மணஞ்செய்த இளம்பிராயம் வாய்ந்த பெண்ணென்றாவது சிறு குழந்தைகளென்றாவது வயது முதிர்ந்த பெரியோர்களென்றாவது வாலிபர்களென்றாவது சற்றேனு மெண்ணாமல் கொல்லுவதே தொழிலாகவுடைய எமன் கொன்றுமலைபோல் குவித்துக்கொண்டே யிருக்க, அக்கினியை வாயினிடமாகக் கொண்டுள்ள சுடலையானது தினசரி தின்றுகொண்டே யிருப்பதைக் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருந்தும் நன்மையைத் தரக்கூடிய தர்மங்களை நிலைநிறுத்த எண்ணாமல் துன்பத்தைத் தரக்கூடிய செல்வத்தினால் துன்மார்க்க காரியங்களில் ஆழ்ந்து வாழ்ந்து வருகிற மனிதஜென்மங்களுமுண்டோவென்று கவனிக்க, நமது வாலிபதிசையு நில்லாது இத்தேகமும் நில்லாது. நாம் பெறும் புதல்வர்களாலும் நரககதி நீங்கி பரகதியடைவோமென்பது கிடையாது ஆகவே நாம் செய்துவரும் சற்கருமமாகிய தர்மம் ஒன்றுமாத்திரமே நமக்கு எப்போதும் துணையாயுள்ளதென்பது மேல்கூறிய செய்யுளின் அர்த்தமாக முடிவதோடு, நாம் எடுத்த இந்தத் தேகமானது காலவித்தியாசமின்றி நீர்மேற் குமிழியைப் போல் வெகு சீக்கிரத்தில் அழியுமென்பதற்கு அடியில் கூறிய பாட்டினால் விளங்கும். உதாரணமாக,

"இப்பவோ பின்னையோ மத்யகாலத்திலோ இராவிலோமதிலோ - இரவிலோ பகலிலோ உதயகாலத்திலோ வெம்மெத்த கோமதிலோ, அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ அர

மிலோ விழுவதனிலோ - ஆராத புண்ணிலோ அடர்நோய்கள் தன்னிலோ ஆயுத வகைகளிலோ, செப்பரிய வீட்டிலோ கோட்டிலோ காட்டிலோ தெருவிலோ இன்னதனிலோ - ஜெகந்தனி லெந்தெந்த விடமதி லெவ்விதம் விதிக்கின்றதோ தனை, அப்போது வந்துநின் கருணைதந் தெனையாளு மம்பலத் தமர்ந்தவிசே - அண்டபகி ரண்டமாகி நின்றபெரு தண்டனியே ஆதியே ஜோதிமயமே"

"இருவினைப் பகுதியா லெடுத்திட்ட தேகந் தன்னை மருவிய நாளெல்லாம்" வாக்கியத்தினைக் கொண்டு சிந்திக்கில் "வினைப்போதில் தேகம் இனைப் போவதில்லாது கண்டாய்" என்னும் நல்வினை தீவினையால் வந்த தேகம் வினைசப்பந்தம் அழிந்தவுடன் அழியும் சொந்தமென்று பாராட்டிய வீடும் மக்களும் பெண்டிரும் தாய்தந்தையர்களும் கூட வருவதும் உண்டோ? இதற்கு உதாரணமாக,

பட்டினத்தடிகள்.

என்பெற்ற தாயாரு மென்னைப்
பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வரக்
வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய ஒருபற்று
மில்லை உடையவனே.

ஆகவே நாம்செய்த நல்வினை தீவினையாகிய இவ் விரண்டின் பிராரத்தம் தொடர்ந்து வருவதே யொழிய வேறில்லை யென்பது ஆன்றோர்கள் உறுதிப்பாடு. இவ்விரண்டு வினையால் நாம் ஜென்மமெடுத்து உழலு கின்றோம். ஆகவே செய்தற்கரிய தவஞ் செய்து,

இம்மானிடப்பிறவி யெடுத்து நாம் இதுவரையில் கொஞ்சமேனும் மனோசஞ்சலமில்லாமல் சுகம் அநுபவித்து வாழ்ந்ததுண்டா? ஐயோ! ஒவ்வொருவரும் "நாம் ஏன் பிறந்தோம்; நாமென்ன செய்தோமோ; அந்தப் பாழுந் தெய்வம் என்னைப் பிறப்பித்து இந்த அவதிக்குள்ளாக்கினானே" யென்று ஏங்கிப் புலம்பிக் கதறுகிறோமே யொழிய, பிறந்ததுமுதல் நாம் சந்தோஷமாகவே யாதொரு மனக்குறையின்றி எந்தக் காலத்திலும் அநுபவித்ததுமில்லை அநுபவிக்கப்போகிறதுமில்லை. இந்த ஜென்மத்தினால் நாம் படுங்கதியைக்கவனிக்க. ஒவ்வொருஜென்மத்திலும் எவ்வளவு கஷ்டநிஷ்டூரங்கள் அநுபவித்தும் அநுபவிக்கப்போகிறவர்களாயும் இருக்கிறோம். நாம் எந்தக்காலத்தில் நற்கதியடைவதென்று ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசிக்கவேண்டும். சற்கருமஞ் செய்தால் நற்கதியடைவதற்கு ஏதுவாயிருக்கும். எப்படியெனில், சற்கருமத்தால் ஈஸ்வரபக்தியும், ஈஸ்வரபக்தியால் சித்தசுத்தியும், சித்தசுத்தியால் ஆத்மஞானமடைந்து மேற்கூறிய இருவினையுமற்று பரகதி யடைவாரென்பது திண்ணம். இதற்கு உதாரணம்,

"சித்தமல மறுவித்து சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்றருளிய வாக்கியத்தைக் கவனிக்க நன்கு விளங்கும். இப்படிக்கில்லாமல் ஊருக்குழைத்த பாட்டைப்போலாகாமல் நமக்காக இகசுகத்திற்கு ஆக வேண்டியதைத் தேடுவதைப்போல் பரகதிக்காக வேண்டி நம்மால் கூடுமானமாத்திரம் சத்கருமங்கள் செய்ய முயற்சிக்கவேண்டும். சத்கருமமாவது:

"எய்தற்கரிய யாக்கைதனைக்
கெய்திற்றென்று எதுகொண்டு
செய்தற்கரிய அறங்கள்பல
செய்ததுயர்கூர் பிறவியினின்
றுய்தற் கரியவொன்று."

என்னும் வாக்கியத்தைப்போல அறங்கள் முப்பத்திரண்டையும் நாம் செய்யவேண்டியதாயினும், நம்மால் இயன்றவரையில் நாம் செய்தே தீரவேண்டுமென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. ஆதலால் எமது மாணவர்களே, யாம் சொல்லப்புகுந்த விஷயம் அறத்தில் சிறந்த அறமானது, ஒருவரைக் கல்வியில் பழக்கிவைப்பதே சிறந்த அறமென்பது பெரியோர்கள் கொள்கை. ஏனெனில் அன்னவர்களால் சேரும் நன்மைகளோ கணக்கட் உண்டு. இவற்றோடு கல்விபோதித்த ஆசிரியரும், கல்வியில் அன்னவர்கள் தேறுவதற்கு ஆதாரமாயிருந்தவர்களும், அவ்வித நன்மையையடைவார்களென்பது சொல்லாமலே விளங்கும்.

"கண்ணிரண்டே யாவர்க்கும்
கற்றோர்க்கு மூன்றுவிழி."

என்கிற பாவினால் கல்வியானது இயற்கையால் நமக்கமைந்த இருநேத்திரத்தைக் காட்டிலும் மிகுதியும் சிறப்புள்ள நேத்திரமாகும். அவற்றால் நன்மையடைவதும் உள. ஆகவே எமது மாணவர்களே! கல்வியை விருத்திசெய்ய முயலுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிராமங்களிலுள்ள பெரியதனக் காரியஸ்தர்களிடம் கூக்குரலிடுங்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் கல்விச்சாலை ஏற்படுத்தச் சொல்லுங்கள். கிராமச் செலவினால் அந்தக் கல்விச்சாலை யேற்

படவேண்டும். உபாத்தியாயராக ஒருவரை நியமித்து அவருக்குரிய சம்பள முதலாகிய செலவுகளைக் கிராமத்திலேயே செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் சம்பளம் கொடுக்க சக்தியுள்ள தாய்தந்தையர்களிடம் வசூலிக்கவேண்டும். அப்படி சம்பளம் கொடுக்க சக்தியில்லாதவர்களைக் கட்டாயம் செய்யப்படாது. மேற்படி கல்விச்சாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு உணவுமுதல் உடுப்பு கைத்தொழில் முதலியவை நடப்பிக்க நம்மவரினில் விவேகிகளாக இருக்கப்பட்டவர்கள் முறைதவறாது கவனிக்கவேண்டும். அல்லது சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு பிள்ளைகளை வீட்டு வேலைக்கு வைத்துக்கொண்டு எம்முடைய கிராமத்திலும் கல்விச்சாலையிருக்கிறதென்று பேருக்கு நடத்தப்பட்டு வராதபடி, மேற்படி பிள்ளைகள் சீர்படும்பொருட்டு நம்மால் கூடுமானவரையில் கவனிக்கவேண்டும். நாமும் கிராம அதிகாரிகளுக்குச் சகாயபுருஷர்களாகத் தேக கஷ்டத்தினாலும் பொருளுதவியினாலும் இதை முன்னுக்குக் கொண்டுவர பிரயாசைப்படுவதோடும், எதற்கும் பொருளே முக்கிய காரணமாக இருப்பதால் பொருள்சகாயம் செய்யக்கூடியானவர்கள் இவ்விஷயத்தில் மனத்தளர்ச்சி அடையாமல் முன்னுக்கு வந்து, ஊரார் பிள்ளைகள் சீர்படவேண்டிய நிமித்தம் நாம் ஏன் பொருள் சகாயம் செய்யவேண்டுமென்று நினைக்கும் அறிவீனர்போலாகாமல் உதவிசெய்தே தீரவேண்டும். அப்படி உதவி செய்தவருடைய பெருமையைப்பற்றி சொல்வதற்கு ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனாலும் முடியாதென்பது திண்ணம். இப்படி இருக்க

இதன் பெருமையை இன்னதென்று சொல்லுதற்கு என்னுல் தரமல்ல. இதன் பெருமையை சொல்ல ஆரம்பித்தால் ஒருகால் விஸ்வாமித்திரர் வசிஷ்டரைக் கண்டபோது அன்னவரால் கௌரிக்கப்பட்ட தானத்தின் பெருமை யெவ்வளவோ அவ்வளவு பலன் அடைவார்களென்பதற்கு ஆட்சேபனை யாதொன்றுமில்லை. செல்வத்தைப் பெரிதாக நினைத்துச் சற்பாத்திரங்களில் செலவழிக்காமல் "சுயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்பதைப்போலும் கட்டுக் காத்துத் தத்தம் செய்கைபோகில்லாமல் சாகுஞ் சமயத்திற்குத் திரவியங்களைக் கொண்டுவந்ததுமில்லை கொண்டுபோவதுமில்லை. ஆகையினால் பரோபகாரம் செய்வதற்கு யோக்யதையாகிய கல்வியைக் குவித்து நீங்களொருவரும் முயலவேண்டும்; அப்படி நாம் முயலமல் கைவிடுவோமானுல் சிற்சித்திர பாடுபடுத்துதல் பல முடியுமேயன்றி வேறில்லை.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடு கெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டு
ஆவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்"

என்பதைப்போல் வியர்த்தமாகாமலும் துன்மார்க்க வழியில் செலவிடாமலும் சன்மார்க்கத்திற் செலவிட முயலுங்கள்.

தம்பி.

"தந்திர மாகவாம் தேடும் பணங்களெல்
சண்டாளர் கையினில் சிக்கிக்கொண்டால்
அந்தர தேவதை வந்து நகைத்தாலும்
அன்னித் தெளிக்கரோ மானிடரே.

பாடுபட்டுதினந் தேடும் பணம்பொல்லா
பாதகர் கையினிற் சேர்ந்திடுமே
கூடியொழுங்காய் ... வாட வென்று
கூசாமற் பேசுவர் மானிடமே.

காசினை மதித்து பொருளுள்ளோரை
கண்டாலுமவர் பேசாரே
மோசக்கார ஈசனை வையாமல் நித்தியம்
மூத்தோர்சொல் கேட்பாயே மானிடமே." என்றும்,

பட்டினத்தார் பாடல்.

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரஞ் செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே.

ஆவியொடு காய மழிந்தாலும் மேதினியிற்
பாவியென்ற நாமம் படையாதே

என்றும், அப்படி ஆகாமல் பாவியென்ற பேர் படைத்தும் சமயால் நித்தியாருக்கு என்னிதற்றி னும் உதவியில்லை யென்கிற பேரெடுக்காமல் நிற் வரும் பாட்டைக் கவனிக்கவும்.

"குணமற்ற பெண்களும் வைத்தலை தழைத்தென்ன
குட்டிச்சுவர் சென்றிலென்ன
குலமற்ற பிள்ளை சாவிதன்ன சகலர்
கொஞ்சமாய்ப் போயிலென்ன
மணமற்ற செம்புருக் கரையும் தளர்ந்தென்ன
மடாது போயிலென்ன
மதமற்ற மனுஷர்க் கடவுள் சத்தியென்ன
மனதைக்கடவுள் பாவென்ன
உணவற்ற பெண்களை படைத்தென்ன படா
தாகர்ந்தாள் போயிலென்ன

உதவாத பேர்க்குமிகு வாழ்வுவந் தாலென்ன
வோங்குமிடி வரிலென்ன காண்"

என்பது ஆன்றோர்மொழி ஆகையினால் நமது ஜீவ திசைக்குள் ஒவ்வொருவரும் தம்மால் கூடியதை நிலை நாட்டவேண்டும். அப்படி நிலைநாட்டாமற் போவோமானால் கீழ்குறிக்கும் பாட்டின் பிரகாரமே நமது ஜனனம் முடியுமேயன்றி வேறொரு கீர்த்தியும் கிடைக்காதென்பது பெரியோர்களுடைய கொள்கையாக முடியும். நாம் மனிதராகப் பிறந்தும் பிரயோசனமில்லை.

"ஓதரிய தண்டலையா ரடிபணிந்து
நல்லவனென் றுலக மெல்லாம்
போதமிகு பேருடனே புகழ்படைத்து
வாழ்பவனே புருட னல்லால்
ஈதலுட னிரக்கமின்றிப் பொல்லாத
பூதமென விருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ
டொக்குமெனக் கழறலாமே."

ஆகையினால் இப்பவோ பின்னையோ என்கிற மரணத்தைக் கவனித்து ஒவ்வொருவரும் தம்மால் கூடுமானவரையில் முயன்று இப்புத்தகத்தில் கூறிய தர்மச்சாலைகளை நிலைநாட்ட வேண்டி முயலுங்கள். அப்படி நமது ஜீவதிசையில் முயலாமற் போவோமானால் நாம் எடுத்துள்ள ஜனனமும் [illegible]தாக முடியுமேயல்லாமல் நாம் தேடிய திரவியங்களெல்லாம் யானையுண்ட விளாங்கனியைப்போலாகுமென்பதற்கு உதாரணமாக,

"கம்ப னடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்

59623

கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்"

எனவும் மேற்கூறிய பாட்டினால் பொது நன்மைக்காக செலவிடாதவர்களுடைய திரவியங்கள் இவ்வித துர்விஷயங்களுக்குப் போகுமே யொழிய வேறில்லை. அதன்றியும் அப்பொருளைப் பணங் காத்த பூதம் போலிருந்து இறப்பவர்களுடைய கதி யென்னவாகு மென்பதை யோசிக்கும்போது,

"மண்ணார் சட்டிக் கரத்தேந்தி
மாநாய் கவ்வுங் காலினராய்
அண்ணாந் தேங்கி யிருப்பாரை
அறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பண்ணார் மொழியார் பாலடிசில்
பைம்பொற் கலத்தில் பரிந்தூட்ட
உண்ணா நின்ற போதொருவர்க்
குதவா மாந்த ரிவர்தாமே"

என்னும் வாக்கியத்தை நன்கு கவனித்து இச் சிறியன் எழுதிய வண்ணம் நடப்பிக்கக் கோருகிறேன். தவிர இங்கே யான் இதுவரையில் கூறிவந்தது நமது மரபின் பிள்ளைகள் சீர்படவேண்டுமென்பதும். கல்வியில் தேறவேண்டுமென்பதும் சற்பாத்திரர்களாக விளங்கவேண்டியதுமென்பதே. இதனால் நம்மவரில் சிலர் நினைக்கலாம்: பிள்ளைகள் கல்வியில் தேறவேண்டுமென்பது ஆண் பிள்ளைகள்தானென்று யாவரும் கொள்ளவேண்டாம். ஆண் பெண்ணென்று குறிப்பிடாமல் பொதுவாகப் பிள்ளைகளென்று குறித்தபோது ஆண்பெண் இருதிறத்தாருக்குங் கல்வி நிறைந்தால் மரபு சீர்பெற்று விளங்கும். ஆனால் சிலர் சங்கை செய்யக்கூடும். அதாவது: ஆண்பிள்ளைகள் கல்வியிற்

றேனினுல் நீரெழுதியபடி சகலவித நன்மையுண்டா
கும். சட்டிபாள்களுக்குப் புத்திசொல்லும் பெண்க
ளுக்குக் கல்வி யெதற்காக; அவர்களென்ன உத்தி
யோகம் செய்யப் போகிறார்களா என்று சிலரும்,
சேச்சே பெண் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துக்
கொடுத்தால் குடித்தனம் கெட்டுப்போம்; இது இல்
லாத வழக்கமா யெழுதியிருக்கிறது. நமது மாபு சீர்
படுமென்று இவர் எழுதினரே இது சுத்த பிசகு.
மாபு இப்போது இருக்கிறதும் சீர்ழந்து போய்விடும்.
படிப்பின் லட்சணம் தெரியாததற்கு முன்னமே
யாரையும் மதிக்காமலும், மாமியார் மாமனார் நாத்தி
யாரென்கிற மதிப்பில்லாமல் பேசுகிறதும், புரு
ஷனுக்குத் தலையணி மந்திரம் போதித்து, சிறு தடி
பன்களைக் கையில் போட்டுக்கொள்வதும் வீடுவீடாக
நடப்பதையும் நாம் பார்த்து வருகிறோமே. அதன்றி
யும் படித்திருக்கும் பெண்கள் வாழ்கிறதைப் பார்க்க
வில்லையா. படிக்காதவர்களாகிலும், யாதோ கொஞ்சம்
பெரியவர்கள் வழக்கத்தை யொட்டி நடக்கிறார்கள்.
படிக்கத் தெரிந்தவர்களோ கொஞ்சமேனும் யாரையு
மதிக்கிறதில்லை. நானென்ன படிக்கத்தெரியாதவளா?
என் ஆம்படையானுக்குமேலே நான் படிப்பேன்.
இந்தக்கிழங்களை ஏன் மதிக்கவேண்டுமென்கிறார்கள்.
அதன்றியும், கொஞ்சம் படிக்கத் தெரிந்தவளாயிருந்
தால் நீ என்னடா முண்டம் படிக்கத் தெரியாதவன்
என்னை அதிகாரம் பண்ணுகிறாய்; உனக்குமேல் நான்
படித்தவளாச்சுதே; உனக்கென்ன புத்தியிருக்கிறது.
என்று பேசுகிறார்களே. அன்றியும் அச்சம் பயமில்லா
மல் தாம் வீட்டுக்கு இங்கு நடக்கும் சேதிகளை எழுதி

அனுப்புகிறதும் அவர்கள் வந்து விசாரிக்கிறதும்,
அதன்றியும் இன்னும் அனேகவிதமான ஆச்சரிய
ஙக்கு இந்தப் படிப்பு ஆதாரவாய் விடுகிறதே. அப்படி
இருக்க, பெண்களுக்கும் படிப்பு வேண்டுமென்று
எழுதி யிருக்கிறதேயென்றும், சிறுபோதில் நம்மை
நம் பாட்டியார் பூரணசந்திரனிடத்தில் களங்கமிருப்
பதைப் பார்த்து அதை ஒரு ஔவையார் கிழவி உட்
கார்ந்திருக்கிறாளென்று சொன்னபோது ஆம் ஆ
மென்று தலையசைத்தோமல்லவா. அதைப்போல இப்
பவும் அம்மாதிரி கிழவிகளைப்போல பிணத்துப்படி
யான வார்த்தைகளுக்கும் ஆம் ஆமென்று எழுதின
வன்மீது அருவருப்புகொண்டு இதுகூடாத காரியம்;
அப்பப்பா படிக்காதவள் கொஞ்சநாள் கழித்தாவது
புருஷனைத் தன்வசப்படுத்திக்கொள்வாள்; படித்த
வளோ கோலம் வருமுன்னே கொசுவன் வீடெங்கே
யென்பாள்; உடனே கெட்டது குடித்தனம். ஆகவே
இவரென்னமோ "வைசியகுல சிந்தாமணி" யென்று
யெழுதினாரே அதைப் பார்ப்போமென்று பார்த்தால்
வைசியகுலம் விளங்குவதாகக் காணோம். ஆகவே
பெண்களுக்குக் கல்விகூடாது என்று எழுதினால் இப்
புத்தகம் சிலாக்கியந்தானென்று சொல்லப்பட்டவர்க
ளும் பூவுலகில் அவதரித்திருந்தால் இவர்களை யென்ன
வென்று சொல்வது என்று நானும் என் பேனாவை
சற்றே நிறுத்தி யோசித்தபோது என் சிற்றறிவிற்கு
இவர்களே, அந்தோ பரிதாபம்; கடல்சூழ்ந்த இப்
பூவுலகில் வாழும் ஜீவராசிகளுள் மனிதப் பிறப்பாக
வந்து இவ்வித அறிவின்மையோடு சொல்லுவோரைப்
பார்க்க வந்த புத்திசாலிகள் மனம் வெறுப்படையாது.

ஆகிலும் இவர்கள்மீது ஆயாசப்படுவதில் பிரயோசனமில்லை. சிறுகுழந்தைகள் ஆயாசமாகக் கூறுவதைக் கண்டால் யாரும் நகைப்பதுபோலவே முடியும். அதிகமாக இவ்விஷயத்தில் எழுத இப்போது முடியாதென்றே நிறுத்தி மேல் பெண்கள் கல்விகற்க வேண்டியது அவசியமென்பதற்கு என் சிற்றறிவிற்கு எட்டியவைகளில் சிலவற்றைச் சுருக்கமாக சிலவிஷயங்களைச்சொல்லி முடிக்கிறேன். அதாவது: நாம் தற்போது கொண்டிருக்கும் ஆசிரமத்தில் "பிரம்மசரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் சன்னியாசம் என்னும் நான்கு ஆசிரமத்தில் கிருகாசிரமம் மேற்கொண்டு பெண்சாதியோடிருந்து நம் வாழ்நாளைக் கழிக்க வேண்டியவர்களாக முடிகிறோம். நம்மில்வாழ்க்கை கழிப்பதற்கு நமக்கு ஆதரவாயிருப்பவர்கள் நம் இல்லாட்களே. இல்லறமானது இரண்டு எருது பூட்டியிருக்கும் ஓர் சகடம்போலுள்ளது. இரண்டு எருதுகளும் ஒரேமனதாய் வண்டியை இழுத்தால்தான் வண்டி போகவேண்டிய இடத்திற்குத் தவறுதலில்லாமல் கிரமமாகச் செல்லும். ஒன்றுக்கொன்று முரணிக்கொண்டால் எவ்விதம் போகவேண்டிய இடம் போய்ச் சேரும். அதுபோல் கிரகாசிரமத்தை மேற்கொண்ட சதிபதி இருவரும் மனமொத்து இல்லறகர்மத்திற் கொஞ்சமேனும் வழுவின்றி எல்லோராலும் புகழும்படி வாழ்கிறவர்களையல்லவா அவனியில் தேவரென்று ஆன்றோர்களால் சொல்லப்பட்டு இருக்கிறார்கள். "இல்லறமல்லது நல்லறமன்று" என்று நம் பேரறிவுடைய மூதாட்டியார் கூறியுள்ளது இல்லறத்தின் தர்மத்தை நடத்துவதற்கு முக்கிய ஆதா

வாயுள்ளவள் மனைவியல்லவா. இல்லாள்களில் சகல வித லட்சணமும் குணமும் ஒரு பெண்பாலுக்குப் பொருந்தியிருந்தால்மாத்திரந்தானே அன்னவள் புருஷனுடைய இலட்சணமும் குணமுடையவரும் அறிந்து அன்னவருக்கு எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டுமென்பதும் அன்னவருடைய நோக்கம் இன்னதென்பதும் தெரிந்து அவருக்குத் தன்மீது எவ்விஷயங்களிலும் அனுவளவேனும் அருவருப்புண்டாகாதவண்ணம் காத்து நடப்பதோடும் இன்னும் இருக்கப்பட்ட உறவின்முறையாருக்கும் பிரீதியுண்டாகும்படி நடந்துகொள்வாள். ஒருவனுக்கு மனைவியாக வரும் ஸ்திரீ எவ்வித லட்சணத்தோடு பொருந்தியிருக்க வேண்டுமென்றால்,

“அன்னை தயையும் அடியாள் பணியு மலர்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னவடையும்
வேசித் துயிலும் விரண்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்”

என்கிற வாக்கியத்தைக் கவனிக்கில், ஒரு பிள்ளைக்குத் தாயானவள் அன்போடு தன் பிள்ளை எவ்வித வுணவிலும் திருப்தியுடன் புசிப்பானென்று அதைப் பாகஞ்செய்து அவனுக்களித்து அவன் தேகம் சற்றேனும், வாடாவண்ணம் கண்ணோக்கமாயிருப்பாளோ அவ்வண்ணம் தன் புருஷனுடைய சவரட்சணையில் சற்றேனும் குறைவின்றித் தாய்போல் உண்டுபணித்து வருவாள். அன்றியும் ஒரு வேலைக்காரி சம்பளத்திற்கமைந்த எஜமானிடம் எவ்விதம் பயந்து ஊழியஞ்செய்து வருவாளோ அத்தன்மைபோல்வீட்டுக்காரியங்களைக் குறைவின்றிச் செய்வாள்.

அதன்றியும், பொன்னிறமுள்ளவளும், பூமியைப் போன்ற பொறுமையுடையவளும், கோபமென்பதில்லாமலும் தனக்குப் பிறர் தீங்கிழைத்தபோதிலும் அவைகளைச் சகித்துக்கொள்பவளும், சாந்தமே ஒருருவம்போலுள்ளவளும், சுத்தமாக ஆடை தரிப்பவளும், புருஷனுடைய சையோக காலங்களில் தாசிக்கொப்பாக அவர்க்கின்பங் கொடுப்பவளும், அதாவுமன்றி ஓர் அரசனுக்கு மந்திரியைப்போல், புத்தியில் யோசனை மிகுந்தவளுமாகிய மேல்சொன்ன எல்லாவித குணங்களும் நிறைந்திருப்பவளைப் பத்தினியென்று சொல்லப்படும்.

“அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்”

என நாயனார் கூறியபடி இல்லறதர்மம் வழுவாது நடத்த யோக்யதையுள்ளவளாகிறாள். மேலும்,

“தெய்வந் தொழாஅள் கொழுநனைத் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை”

என்னும் வாக்கியத்தைப்போல் தனது கணவனைத் தெய்வமாகப் பாவித்து, சதா தன் கணவருடைய சொரூபத்தை இருதயத்திலிடமாகப் பூஜிப்பாள். திரிமூர்த்திகளையும் சிந்தியாள். அப்பதிவிரதாசிரோமணியால் திரிமூர்த்தியும் ஒருகாலத்தில் அவமானமடைந்ததுமன்றி அப்பதிவிரதையின் கையில் மூன்று குழந்தைகளாகத் தவிக்கவில்லையா. எப்படியெனில் ஒருகாலத்தில் நாரதமுனிவர் தேவலோகத்தில் அத்திரிமாமுனிவர் பெண்சாதியாகிய அநசூயாதேவியின் கற்பின் பெருமையைச் சொல்ல, தேவர்கள் எழுது கடலையை வறுத்துத் தரவேண்டுமென்று

கேட்க, அவ்விதமே அநசூயாதேவி செய்துகொடுக்க, அதனைத் திரிமூர்த்திகளும் கண்டு வியப்படைந்து அன்னவளுடைய கற்பைச் சோதிக்க மூவரும் அந்தம்மாளிடம் போனபோது அம்மூவர்களையும் தன் பதிவிரதையின் மகிமையால் மூன்று குழந்தைகளாகச் செய்து தொட்டிலில் கிடத்த, அம்மூவரும் அச்சாபத்தை நிவர்த்தி செய்துகொள்ள முடியாமல் கிடக்க, அம்மூவர் பத்தினிமார்களும், அநசூயாதேவியிடம் வந்து மாங்கல்ய பிச்சை கேட்டு அம்மூவரையும் முன்போல உருவாக்கின பிறகு தம் தம் பதிக்கு ஏகினர்கள். ஆகவே பதியே தெய்வமென்று பூஜிப்பவர்களை மூன்று உலகமும் தொழும். சந்திரமதி நளாயினி தமயந்தி சாவித்ரி இன்னுமநேகர் இம்மாதிரியாக நடந்து பரமசாம்ராச்சியத்தைக்கைக்கொண்டனர். இவ்வளவு பதிவிரதாதன்மத்தை மேற்கொண்டு நடந்ததற்கு அவர்கள் கொண்டிருந்த கல்வியும் சாஸ்திர ஆராய்ச்சியுமல்லவா. அதன்றியும் புருஷன் எவ்வளவு ஈனமான காரியத்தைச் செய்து பல தீங்குகள் விளைக்கினும் அன்னவன்மீது கொண்டுள்ள பதிபட்சம் இனமேனும் மாறாமல் அவனைச் சிலாகித்தும் பேசி, அவனை இகழும்படியானவர்களின் வாய்மதம் அடங்கும்படி செய்வாள். அதன்றியும், தம் புருஷனை இம்மைப்பயனை அடையத் தூண்டுதலோடு மறுமைப்பயனை அடைதற்கு வேண்டிய சாதனங்களைத் தேடுவாள். திருஷ்டாந்தமாக சூடாலை என்னும் பெண்மணியானவள் தானும் தன் புருஷனாகிய அரசனும் ஞானமடையவேண்டி ஸ்ரீ சற்குருவையடைந்து அவரால் உபதேசிக்கப்பெற்ற மொழியைக்

கொண்டு இருவரும் அப்பியாசித்து வருநாளில், ஆடாங்கியானவன் நன்கு சாஸ்திரங்களும் கைவந்தபடியால் பஞ்ச இன்முத்திரை இலட்சணத்தோடு விளங்கி நிஷ்டைகூடி பிரம்மதேஜோமயமாய் விளங்கினன்; அதைக் கண்ணுற்ற அவ்வரசன் இவன் பிரம்மதேஜஸைக் கண்டு, ஒகோ இவன் செல்வச்செருக்கினுல் இவ்விதம் விளங்குகிறனென்று அபிப்பிராயங்கொண்டு நாம் இவ்விடத்திலிருந்தால் ஞானம் சித்தியாது. ஆபாச சேதியாமென்று தீர்மானித்து, காட்டுக்கு ஒருவரோடும் சொல்லாமல் சென்றுவிட்டார். இச்சங்கதி ஆடாங்கி தெரிந்தவனாய் அரசன் வெளியேறிய சங்கதி யாருக்கும் தெரிவிக்காமல் தாம் அம்முத்திரை மோதிரங்கொண்டு அமைச்சர்கள் மூலமாய் ராஜரீகம் நடத்திவந்ததோடு தன் புருஷனைக் கண்டுபிடிக்கும் நிமித்தம் பிரஜையாட்சிதிகளை மேற்கொண்டு அதிக நேமத்தோடு அஷ்டவித சித்துகளையுங் கற்றுத் தேர்ந்து தனது சித்மாய்கையால் வனத்துக்குள் புகுந்து தன் நாயகனைத் தேடிக் காலங்களில் ஓர் மரத்து நிழலில் அன்னமாகாரமில்லாமல் இளைத்த தேகத்தோடு விளங்குகிறதைக் கண்டு அவனெதிரில் ஒரு ரிஷிவேடத்தோடெதிரில் வந்து நிற்க, அன்னவன் ஓடோடியும் வந்து காலில் விழுந்து ஞானலட்சணம் போதிக்கவேண்டுமென, அப்படியே யாகட்டுமென்று சம்மதித்துத் தன்பெயர் கும்பமுனியெனத்தெரிவித்து ஞானலட்சணம்போதிக்கவேண்டுமென, அப்படியே யாகட்டுமென்று சம்மதித்துத் தன்பெயர் கும்பமுனியென தெரிவித்து ஞானலட்சணம் போதித்து தினசரி ராத்திரி காலங்களில் தான்

வந்து போதிப்பதாய் வாக்களித்துப் பகற்காலங்களில் ராஜகாரியம் பார்ப்பதும் இராக்காலங்களில் அரசனோடு சென்று சம்பாஷிப்பதும், இவ்விதமாகச் சில வருஷங்களுக்குள் அரசன் சம்பூர்ண மடைந்து நிஷ்டைகூடி நிற்பதைத் அறிந்து தன் கொள்கைநிறைவேறியதென்று சந்தோஷித்தவளாய் நிற்க, கண் விழித்து அரசன் எதிரில் நிற்கும் தனது ஆசிரியனைக் கண்டமாத்திரத்தில், அளவிலாத ஆனந்தத்தோடு நமஸ்காரம் செய்யவந்த அரசனைத் தடுத்து தன்னிஜரூபத்தைக் காண்பிக்க அரசன் வியப்படைந்து நிற்க, தான் நடந்த விவரங்களைக் கூறியபோது அரசன் சந்தோஷித்தவனாய் நீ எனக்குக் குருவாய்த் தோன்றி என்னைக் கரையேற்றியபடியால் உன்னை நமஸ்காரம் செய்தல் தகுதியென அதனை மறுத்துச் சூடாலை சொல்லுவாள்: சுவாமி அடியாள் தங்களுடைய அடிமையும் மனைவியுமாய் வந்த நான் செய்த காரியம் பெரிதல்ல. அதன்றியும் புருஷனை இம்மைப் பயனுக்கு வேண்டியும் மறுமையின் பயனுக்காக் வேண்டியும் உழைத்து அப்பயனடையவேண்டியவற்றிற்கு உதவியாய் இருப்பவளைத்தானே பதிவிரதையென்று கூறுவார்கள். ஆகவே யென்னுடைய கடமையை நான் செய்திருக்க என்னை நீர் புகழுவது நீதியல்லவென்று சொல்லி, தன்னுடன் வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டு தான் எப்போதும்போலி லவேல் ராஜ்யத்திற்கு வந்து சேர்ந்து, பின்னாள் கழித்து அரசனும் வந்து சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். இப்பதிவிரதை தான் ஞானலட்சணமுணர்ந்திருந்தும் தன் பதியே தெய்வமென அவருக்காக வேண்டிய காரி

பங்களை முடித்து சந்துஷ்டியுடன் இருந்தது எத னையோ சகாப்தங்களென்றுமே “தான்கற்ற நூல ளவே தன்னறிவு” என்பதற்கிணங்க அன்னவள் கல்வி கேள்விகளில் தேறி சாஸ்திர ஆராய்ச்சி இருந்தபடியால் தன்பெயரை யெத்தனையோ காலங்களுக்குப் பின்னும் விளங்கும்படி நடத்திகொண்டாள். இத்தகைய லட்சணம் பொருந்திய ஸ்திரீகளை மனைவிகளாகப் பெறுவோர்கள் தங்கள் ஸ்திரீகளை விட்டு அன்னிய ஸ்திரீமுகம் தெரிசனம் செய்வார்களா? குடும்பமானது எவ்வளவு செழிப்பாக வோங்கும். புருஷர்கள் எவ்வாறு அன்பாய் நடத்திவருவதோடும் அவர்கள் உதவியால் சற்கருமத்தை நடத்தமாட்டார்களா. இப்புண்ணியவதியைக் காலகதியால் பிரிய நேர்ந்திட்டால் எவ்வளவு துயரமடையமாட்டார்கள். இதற்கு உதாரணமாகத் திருவள்ளுவநாயனார்,

“அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடி
பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என் தூங்கு மென்கண்ணி ரா”

என்று தன் மனைவி பிரிந்த பிரிவாற்றாமையால் கூறியிருக்கிறார். சகல லட்சணங்களும் ஓர்ந்த பரம ஞானியாய் விளங்கிய அம்மகாநாயனாருடைய தீர்க்க சாந்தத்தைப் பெற்ற மனதும் சற்றே மனைவியின் பிரிவால் சகிக்கவொண்ணாது. காரணம் யாது; அப்புண்ணியவதி சகலலட்சணமும் பொருந்தி தன்பதியே தெய்வமென கிரியபூஜை செய்து வாழ்ந்த பொரு லட்சணத்தாலும் அன்னவர்கூட ஆயாசமுறலாயினர். இவ்வித லட்சணமும் அமைவதற்குக் கல்வியும் கேள்

வியும் ஆதரவாயிருந்தது. ஆகவே பெய தா மாபி னர்களே! இதுவரையில் முற்காலத்தில் இருந்த ஸ்திரீகள் கல்வியில் தேறினவர்களாய் விளங்கி யிருக்கிறார்கள். இவ்வித கீர்த்தியும் என்றைக்கு மழியாத பேரும் எடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் எழுதி வந்தோம். ஆகவே இனி நமது பெண்பிள்ளைகளும் அவ்விதமான கீர்த்தியும் புகழும் எடுக்கவேண்டிய சாதனங்களைப்பற்றி என் சிற்றறிவிற்குத் தோன்றிய படி வரைகிறேன். நமது பெண்களுக்குக் கல்வி கொடுக்கவேண்டும். சிறுபிள்ளைகளாக விருக்கும் போது அர்ப்பாதைக்களவாவது இட்டாவது அல்லது துஷ்டசாவகாசம் செய்யவாவது பெற்றோர்கள் விடப்படாது. கல்வியிற் றேறினவர்களாக விளங்கின போது சாஸ்திரசம்பந்தமான பாடங்களைப் படிக்க வைக்கவேண்டியது. அதன்றியும் கற்புள்ள மாதர்களின் சரித்திரங்கள் வெளியாய் இருக்கின்றன. அவைகளை வாங்கி வாசிக்கும்படி செய்யவேண்டியது. இவ்விதம் செய்வதினால் குழந்தைகளானது சிறுவயதிலிருந்து நன்மார்க்க விஷயங்களிலே மனது பழகி பிறகு கற்புள்ள மாதர்களின் சரித்திரத்தை வாசிக்கும்போது அவர்களுடைய மனமானது இத்தகைய ஸ்திரீகளைப்போல் நாமும் நடந்து நல்ல கீர்த்தியை யெடுக்கமாட்டோமாவென்று பேராவலினையுடையவராகிப் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து தன் மாமனார் மாமியார் நாத்திமார் மைத்துனன் முதலியவர்களை அன்போடு உபசரித்து, அவர்கள் காரணமின்றித் தன்னை வைதாலும் அடித்தாலும் தான் வாசித்த கல்வியால் ஏற்பட்ட பொறுமையினால் சகித்து அவர்

கள் செய்த காரியங்களை அந்த நேரத்தில் மறந்து மறுபடியும் அவர்களுடன் பிரியமான வார்த்தைகளால் சந்தோஷிக்கச் செய்வார்கள்.

இவ்விதம் ஒரு பெண்பிள்ளை செய்வாளானால் எவ்வளவு கொடுங்குரி ஸாத்தியாயிருந்தபோதிலும் அந்தப் பெண்ணை மறுபடியும் இம்சிக்க மனம் எப்படி வரும். அப்படியே கல்மனதுடையவளாயிருந்து அடிக்கடி இம்சித்தாலும் நம் பங்கில் கடவுள் இருக்கிறாரென்று எண்ணி அவர்களோடு எதிர்த்துப் பேசாமலும், அவர் செய்தகாரியத்தைப் புருஷரிடமாவது தாய்வீட்டாரிடமாவது சொல்லாமலும், தான் இம்சை அநுபவிப்பதாகப் பிறருக்குக் காண்பிக்காமலும், தன்காரியங்களில் வழுவில்லாமலும், தாய்வீட்டார் தன்னை அழைக்க வந்தாலும் தன் புருஷருடனல்லது தான் வரமுடியாதென்பவளாயும், புருஷனைத் தெய்வமென மனதிற்கொண்டு அன்னவருடைய வரவுக்குத் தகுந்த செலவு செய்து, வெளியே சென்ற புருஷர், வீட்டில் நுழைந்தவுடன் அவருக்கு எவ்விதத்தாலும் மனக்கவலை வராதபடி காத்து நடப்பதோடு, கடவுள் கிருபையால் தனக்குச் சந்ததிகள் உற்பத்தியானால் அவர்களைக் காப்பாற்றும் முழு சிரமத்தை மேற்கொண்டு அவர்கள் கல்வியில் தேர்வதற்கும் தான் பெரிய ஆதாரமாய் முடிகிறதென்பது யாவருக்கும் விளங்கின விஷயமே. அவ்விதம் முடிவதோடு பிள்ளைகளைத் துன்மார்க்கமாய் ஆடவிடாமலும் சதா பிள்ளைகள் சீர்திருத்தத்திலேயே நோக்கமாயிருப்பாள். இதோடு பெற்றெடுத்த தமக்கு பேரானந்தத்தையும் பிறந்தவிடத்திற்கும் புகுந்தவிடத்திற்கும் நற்கீர்த்தி

யையும் உண்டாக்குவாள் என்பது சந்தேகமில்லை. கல்வியினால் இவ்வளவும் முடியுமென்பது அறிவீர்களாக. இன்னமும் இதுவிஷயமாக விவரித்துப் பின்னால் எழுதலாமென்று நிறுத்தி, மேல் படித்த பெண்களும் வாழ்வதை நாம் பார்க்கவில்லையா என்று கிழவி நினைத்தனளென்று சொன்னேனல்லவா. அத்விஷயமாக இங்கே சற்று விசாரிப்போம். அதாவது படித்த பெண்கள் என்று சொன்னால் எழுத்துக்களொன்றுகூட்டிப் படிக்க எழுத தெரிந்துகொண்டால் அவர்களைப் படித்தவர்களென்று நினைத்துவிட்டோம்; அது சுத்த பிசகு.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்கிற வாக்கியத்தை ஆழ்ந்து கவனிக்கில் அதன் அர்த்தம் விளங்கும். கற்கவேண்டியது எது வென்றால் சாஸ்திர ஆராய்ச்சி செய்வதோடு புண்ணிய சரித்திரங்களை வாசித்து அதன்படி நடப்பதாகும். அதைவிட்டு நம்வீட்டுப் பெண்கள் எழுத்தின் நடைபடிக்க வந்தவுடன், நம்வீட்டுத் தாய்மார்களும், கிழவிகளும் அல்லி அரசாணிமாலை படிக்கக்கொடுப்பதும், பன்னிரண்டு மந்திரிகதை கொடுப்பதும், இன்னுமநேகவிதமான ஆபாசமான கதைகளைப் படிக்கச்சொல்லி, அந்தப்பெண் படிக்கும்போது அவ்விடமிருக்கும் கிழவிகளும் இன்னுமற்ற இல்லத்தவர்களும் கூடி, சுற்றி உட்கார்ந்துகொண்டு ஆஹா எங்கள் குழந்தை என்ன அழகாகவும் ஓசையாகவும் படிக்கிறாள் என்று சொல்லுவதும், ஒரு கிழவி எழுந்திருந்து அந்தப் பெண்ணை திருஷ்டிகழிப்பதற்குத்

தன் இருகரத்தாலும் அப்பெண்ணின் முகத்தைத் தடவி, தன்தலையில் நெட்டை யொடித்துக்கொண்டு அம்மா குழந்தைக்குத் திருஷ்டியாய்விட்டது என்று சொல்வதோடு பெண்ணின் தாயாரைப் பார்த்து அடியம்மா குழந்தைக்கு திருஷ்டியாய்விட்டது; கற்பூரம் சுற்றிப் போட்டம்மாவென்று சொல்பவளும், வேறொருத்தி வந்து அம்மா உன்மகளை நன்றாய் படித்தவனுக்கும் ஆஸ்திகாரனாக பார்த்து கலியாணம் செய்து கொடு என்று சொல்வதோடு உன் மகள் ரொம்பவும் படித்திருக்கிறாள்; அவளை எவனுக்காவது ஏழைக்குக் கொடுத்தால் அவளே வீட்டு வேலை செய்வதோடு சட்டிபானையும் கழுவநேரிடும். இவ்வளவு படிப்பு படித்தவளை அம்மாதிரி வேலைகள் செய்ய நம் கண்ணால் பார்ப்பதாவென்று சொல்லுவாள். இப்படி இவர்கள் சொல்லும் வார்த்தையையெல்லாம் இந்தப் பெண் கேட்டுக்கொண்டிருப்பவளாதலால் தனக்குள்ளாகத் தான் அதிகம் படித்தவளென்றும், தனக்கு நிகர் ஆண்பிள்ளைகளிலும் கிடையாதென்று கெர்வமதிகரித்து விடுகிறது. கெர்வமானது அதிகரித்தால் ஆணவமானது தன்னால் கூடவே தொடரும். இவ்வித லட்சணத்தோடுள்ள பெண்ணை விவாகஞ்செய்து கொடுத்தபோது அப்பெண்ணானவள் தன்னுடைய கெர்வத்தினால் தன் புருஷனையும் அவன் குடும்பத்தாரையும் மதியாது புருஷன்மீதும் இன்னும் மற்றவர்மீதும் குறைகூறுவதும் அடிக்கடி தாய்வீட்டுக்குப் போய் விடுவதும் அங்கே தாய்தகப்பனிடத்தில் தான் மிகுந்த கஷ்டங்களை அநுபவித்ததாகக் கூறி, துக்கிப்பார்கள். உலக்கை கொழுந்துபோலுள்ள புத்திசாலிக

ளாகிய தாய்தந்தையர் மகளை அடி அம்மா நடுவே யிருந்தவர்கள் எங்களிடம் வெகு இதமாகப் பேசி பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டார்களே. இப்படி நடக்குமென்று தெரிந்தால் நாங்கள் கொடுப்போமா; எத்தனைச் சீமான்களெல்லாம் வந்து கேட்டார்கள் கொடுக்கவில்லையே. அந்தப் பாழும் பிரமன் இப்படிப்பட்ட விதி உன் தலையிலெழுதியிருந்தானே. நீ ஏனம்மா அழுகிறாய்; அந்த மூதேவியினுடைய வாழ்வு இல்லாமற்போனால் போகிறது. எங்கள் ஆயுள் உள்ள பரியந்தம் உனக்கென்ன குறைவு; காய் கனம் கொடு தாங்காதா; வயரிடங்கொடுத்தது வீடு இடந்தராதா; என்னமோ மாமியார் மாமனார்தான் இம்மாதிரியான பாபிகளாக இருந்தார்களென்றால் கொண்ட புருஷனும் கொஞ்சமேனும் கவனிக்கிறவனைக் காணோம். தாயார் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு இம்சிக்கிறவனாக இருக்கிறானென்று இவர்கள் சொல்லும் போது, அந்தப் பெண்ணானவள் தன் மனதில் தான் நினைப்பதாவது: தனக்கு யோக்யதையில்லாத புருஷனும் அன்பில்லாத மாமியார் வீடும் நமக்குக் கிடைத்தது. அம்மாதிரி வாழ்வதைவிட சும்மாவிருக்கலாமென நினைக்க, இதோடு தான் தாய்வீட்டிலிருப்பவளாதலாலும் தன்னை அதிகாரம் செய்பவர்களில்லாதலாலும் தன்னைப்போலொத்த வாலிப ஸ்திரீயுடன் கூடிக்கொண்டு வியர்த்தமான வார்த்தைகள் பேசுவதும், இன்னும் துன்மார்க்க ஸ்திரீ சாவகாசம் செய்து, அச்சாவ காசத்தினால் சில பெண்கள் துர்நடவடிக்கைகளுக்கு ஆளாகிவிடுகிறார்கள். சில பெண்களோ இம்மாதிரி பட்டிமாடுகள்போல் திரிவதும்

வேளைக்குவேளை போய் வீட்டில் சாப்பிடுவதும், வேலையொன்றும் செய்யாமல் திரிவதும், இப்படி இருக்க தன் தமையனே அல்லது தம்பியோ விவாகமாகி அன்னவனுடைய மனைவி இருந்தாலோ இம்மாதிரி திரிபவனை வாழாத பட்டியென்று சொல்வதும், அதனால் தாய் வீட்டில் ஒருவர்க்கொருவர் கலகம் உண்டாக்குவதும், அதுவுமன்றி இப்படிப்பட்டவளின் புருஷன் தன் பெண்சாதியைப் பார்க்கலாமென்று வந்தாலோ அவனிடம் தாய்வீட்டில் உண்டான கலகத்தைச் சொல்லிப் பிறகு ஐயா, நீர் சரியாயிருந்தால் இம்மாதிரி எனக்குக் கஷ்டமேன் வரும். உன் தாயாரும் தகப்பனாரும் என்னை சட்டியில் வைத்து வறுக்கிறார்கள் என்று சொல்லிக் கலகம் மூட்டுவதும், அதன்மேல் கொண்ட புருஷன் புத்திசாலியாயிருந்து இவள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு மிகுந்த விசனங்கொண்டு இவளுக்குப் புத்தி சொல்லவாரம்பித்தால் நாய்போல் விழுந்து என் தலையில் இப்படியும் எழுதினாயென்று துக்கிப்பதும், மறுபடி புருஷன் இதை நோக்கி ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய்ப் பிரமித்து இவளென்ன இராக்ஷஸியாக வந்து சேர்ந்தனளே என்றெண்ணி வெளியாருக்குச் சொல்ல வெட்கப்பட்டு, சிசுவதை பிரம்மவதையென்று இருபக்கத்திலும் இடியுண்டு, ஈஸ்வரன் செயலைப்போலாகுவ தென்றெண்ணி மனம் வருந்தி இருக்கின்றான். மூடனாயிருந்தாலோ அப்பெண் சொல்லைக்கேட்டு, தன் தாய்தந்தையரிடம் சண்டை செய்துகொண்டு தன் பெண்சாதியும் தானும் தனிசம்சாரம் செய்ய ஆரம்பித்துவிடுகிறான். இன்னம்

இதை எழுதுவதென்றால் எனது மாபினர்களே எனக்கு ஈஸ்வரன் கொடுத்த ஆயுளும் போதாது என்று நினைக்கிறேன். இன்னும் கொஞ்சம் விவரித்து எழுதலாமென்று எண்ணினுலோ நமது மரபு எப்போது கல்வியிற் சிறந்தவர்களாக விளங்கினவர்களாகி, நம் கண்ணுல் பார்க்கலாமென்று எம்மைப் போன்ற எமது மரபினருக்கு இஷ்டர்களாயுள்ளவர்கள் இப்புத்தகத்தைச் சீக்கிரம் வெளியாக்க கோரினபடியால் இதுவரையில் நிறுத்தி, இனிமேல் படிப்பென்பது இன்னதென்று அறியாத வர்களுடைய நடவடிக்கைகளைச் சிலவற்றைக் கூறி முடிப்போம். அதாவது எமது நல்மரபினர்களே, கல்வியில்லாத நன்மக்களுடைய வாழ்வைப்பற்றிச் சொல்லுவோமென்றால் சிறிது கல்வி படைத்தவன் படிக்காதவன் லட்சணம் சொல்லவேண்டுவதவசியம் இன்மையாயினும் சொல்வது பிழையன்றும் எண்ணி சொல்லப்புகுந்தேன். தான் பிறந்த இடமென்று கல்வி நிரம்பியுள்ள விடமென்று சொல்ல நியாயமில்லை. ஏனெனில் பெற்றவள் கல்வியுடையவளாய் இருந்தால் சிறிதேனும் தேற்றுவாள். ஆகவே மௌடீகமென்பது இவளது சுபாவமேயாகும். இவ்வித மௌடீகத்தினுல் புருஷனுக்கு எவ்விதமாக நடக்கவேண்டியதென் றறியாதவளாய் எல்லாவித காரியங்களுக்கும் இடையூறாய் நிற்பாள் என்பது சொல்லாமலே விளங்கும். அதன்றியும் சந்ததிகள் விளங்கினுலோ அவைகளுக்குக் கல்வியாகிய ஆபரணம் பூட்டவேண்டுமென்றறியாமல் மண்ணில் உற்பத்தியாகி அழியும்படியான பொருள் ஆபரணத்தைப் பூட்ட எத்தனிப்பாள். அதன்றியும்,

26

சிறுகுழந்தைகளாக இருக்கும்போது ஆபாசமான வார்த்தைகளால் பிறரைத் திட்ட ஆரம்பிக்கும்போது அந்த வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தங்கொள்வதோடு இன்னமொருதரம் திட்டும்படி வேண்டுவாள். இவ்வித ஆபாச வார்த்தைகளில் பழகின குழந்தைகளின் கதி என்னவாகுமென்பதை அறிவுள்ளோ ரறிவார்கள். இன்னும் இக்குழந்தைகளைக் கல்வியிற்றேற வேண்டுமென்று புருஷன் கண்டிருக்கும்போது இவர்கள் முன்வந்து அதற்குச் சாக்கு போக்குகளைச் சொல்லி அன்னவனைத் தடுத்துவிடுவார்கள். அதுவுமன்றி புருஷன் சற்கருமத்தில் செலவு செய்ய நினைத்தால் அதின் பலனைச் சற்றுமறியாதவளானபடியால் அவனைத் தடுத்து அவன் கருத்து மாறும்படியான மார்க்கத்தில் நடத்தி வருவாள். அதிதி பரதேசிகளை ஆதரிக்க நினைத்தால்,

"இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
ஆடினுள் பாடினுள் ஆடிப் பழமுறத்தால்
சாடினு ளோடினுன் ருன்"

என்று ஔவை கூறியதுபோல் அவ்வித ஆர்பாட்டங்கள் செய்து அதனையும் தடுப்பாள். புருஷன் தன் இஷ்டப்படி நடக்காதபட்சத்தில் "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்பதுபோல அன்னியரிடத்தில் இவனைப்பற்றிக்குறைகூறுவாள். இதனை நோக்கியே ஔவையார்,

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்

எறுமா றாக விருப்பாளே யாமாயின்
கூறாமற் சன்னியாசங் கொள்"

என்று சொல்லியுள்ளார். இதுமாத்திரமல்ல; பொதுவாக எல்லாவிதமான நன்மையுங் கெடுவதற்கு முதற்காரணமாய் நிற்பாள். இன்னும் அதிகம் இதன் பின்னால் வரும் புத்தகத்தில் காண்பீராக. சுருக்கிய காரணம் கூறியிருக்கிறோம். பெண்கள் கல்விகற்க வேண்டிய தவசியம் என்பதற்காகவும், கல்வி கற்பதோடு சாஸ்திர ஆராய்ச்சியும் கேள்வியும் புண்ணிய சாஸ்திரங்களும் வாசிப்பது நமது மகளிர்களுக்கு அவசியமென்பதற்காகவும் வேண்டி கல்வி கேள்விகளினால் என்றும் நிலைநாட்டி அழியாத பேரெடுத்த கற்புள்ள மாதர்களின் சரித்திரங்களும், அதற்குப் பின்னர் எழுத வாசிக்கத் தெரிந்ததே கல்வியென நினைந்து அதுவரையில் பழக்கிவைத்த பெற்றோர்களின் மகளிரால் உண்டாகும் விர்த்தாந்தங்களும், அதற்குப் பின்னர் கல்வியே பெண்களுக்குக் கூடாது என்று தடுத்து அருமையாக வளர்த்த தாய்தந்தையர்களின் புதல்விகளால் வரும் ஆபாச கீர்த்திகளையும், இன்னதென எம் அநுபவத்திற் கண்டவையும் கேட்டவையும் சிலவற்றைத் தெரிவித்தோம். ஆனால் இங்கே நம்மவரில் சிலர் சங்கை செய்யக்கூடும். அதாவது கொஞ்சம் படிப்பு தெரிந்த பெண்ணும் படிக்கத் தெரியாத பெண்களும் பலரால் புகழும்படியாக வாழ்ந்ததில்லையா? அனேகமிருக்கின்றன. இவர் இம் மாதிரி எழுதினது தவறுதல்; எல்லாரையும் ஒன்று சேர்த்து எழுதிவிட்டாரென்று சொல்லுவார்கள். அது எப்படியெனிலோ அது வாஸ்தவந்தான். அம்மாதிரி

யாகப் புகழான பேரெடுக்க வேண்டுமென்பதே எமது கொள்கை. அன்னவருக்குக் கல்விகேள்வி யமைந்திருந்தால் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்பதுபோல எவ்வளவு சிறந்த மேன்மையுண்டாகும் என்பதை யோசித்தால் விளங்கும். அன்னவர்களைப்பற்றி அதிகமாகக் கூறவில்லை. கல்வியில் தேருவிட்டாலும் அவர்களைப் பழக்கிய தாய்தந்தையர்கள் புத்திசாலிகளாக விருந்தாலும் அன்னவள் செய்யும் சாவகாசம் சன்மார்க்க சாவகாசமாதலால் சற்றே நன்மையான பேரெடுப்பாள். இவ்விதமேனும் இல்லாமல்சீரிழந்துபோகிறவர்களுக்குக் கூறி, அவ்வண்ணம் நடப்பதைத் தடுக்க முயலுங்கள். நமது மரபு நன்கு விளங்கட்டும். மற்ற மரபினரால் சற்றேனும் இழிவாகச் சொல்லப்படாமல் விளங்குவதற்குக் கல்வியே முக்கிய ஆதரவு என்பதைக் கூறவந்தோம். நமது மரபின் இலட்சணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் திருவிளையாடற்புராணம் பெரியபுராணம் இன்னும் சரஸ்வதிலீலா என்னும் சமஸ்கிருத பாஷையில் எழுதியுள்ளதைப் பார்க்கில் அரசர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய அளவிலும் நம்வணிகர்கள் வாழ்ந்ததோடு இன்னும் அநேக தர்மதானங்கள் வழங்கி சிறப்போ டிருந்தார்களென்பது குன்றின்மேலிட்ட தீபம்போல் விளங்கும்.

இதனிடையில் அரசர் தமது வேண்டுகோளுக்கிணங்காத காரணத்தினால் அன்னவர் இவர்கள் செல்வங்களையெல்லாம் சூறையிட்டு இவர்களை இம்சித்து நகரங்களில் இருக்கவொட்டாமலும் இன்னும் பல வித இடையூறுகள் செய்தபடியால் சிதறுண்டு போ

ஞர்கள். அப்போது சில ஜாதி கட்டுப்பாடுகளும், ஏற்படுத்திவிட்டான். அந்தக் கட்டுப்பாடுகள் இன்ன மும் சில இடங்களில் நடந்துவருகின்றன. "செங் கோலின் முன்பு சங்கீதம் செல்லாது" என்னும் பழ மொழியைப்போல குடிகளுக்குத் தாய்தந்தைபோ லுள்ள அரசர்களே நீதிவழுவி நடத்த எத்தனித் தால் யாரென்ன செய்ய முடியும். ஆனால் "அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்" என்னும் வாக்கியத்தைப்போல அவ்வரசர் தன்னிஷ் டம்போல செய்துவிட்டார். ஆனால் சர்வதயாநிதி யாகிய எம்பெருமான் அவர்களுடைய வம்ச பேர் வழியேயில்லாமல் செய்துவிட்டார். ஆனால் நமது மரபோ அருகம்புல்போல் சாகாது. எப்படி அதி தீட்சண்யமான வெய்யலில் தீய்ந்தாலும் மழைக் காலங்களில் ஓங்கி செழிப்பாகப் படர்ந்து நிற்கின் றதோ அத்தன்மைபோல் நாளடைவில் விர்த்தியாய்க் கொண்டு வருகிறது. கூடவே கல்வியும் விர்த்தியா னால் கூடியசீக்கிரத்தில் முன்னுக்கு வருமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் பிறரிகழ்வதற்கு எந்த நாளும் கிடையா. ஆனால் சில வித்துவான்கள் பரிசு கிடைக் காத காலங்களில் பழிப்பாகக்கூறுவது; பரிசுகொடுத் தால் உயர்வாகப் பாடுவது. இவ்வித சேஷ்டைகளால் ஒரு காலத்தில் கம்பன் பழிப்பாகப் பாடினான். அவன் பாடினது சாஸ்திரமல்ல. அன்னவருடைய வாக்கினுமேல் வேளாளர்களைச் சிறப்பிக்கும் நிமித்தம் பாடும்போது பிரம்ம க்ஷத்திரிய வைசியராகிய மூன் றையும் சிறப்பித்தும் வேளாளரைச் சிறப்பித்தும் பாடும் பாட்டில்,

"தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் னிவர்க்குப்பின் வணிகரொனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென் செழிப்புடைய ரானுலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே."

வணிகரெனுஞ் செழுங்குலத்திற் பிறந்தார் சிறப்புடையார் என்றுங் கூறியுள்ளார். எவ்விதத்தாலேனும் எம்மரபை வைசியரிவரல்லவென்று யாராலும் தடுக்க முடியாது. இன்னுங் கூடியசீக்கிரத்தில் நம் மரபைக் குறித்து "வைசியபுராண"மென்னும் நூல் வெளியாகப் போகின்றது. நெருப்போடு காற்றும் சேர்ந்ததுபோல் நம்மவர்களும் கல்வியில் தேறி இருந்தால் அழல்மாருதம்போல் விளங்கும். மற்ற மரபினர்கள் ஆண்பெண் இருபாலாரும் கல்வி நிறைந்தவராக விளங்கவில்லையா? தற்காலத்தில் அம்மாது சிரோமணிகள் எவ்வளவோ புத்தகங்கள் அவர்போல் வந்த பெண்களுக்கு உபயோகமாகும் வண்ணம் வெளியாக்கி இருக்கின்றனர். தவிர நாகரீகத்தாலும் சிறப்புற்று விளங்குகின்றனர்கள். இவர்களைப் பார்த்தாகிலும் நம்மவர்களுக்கு நம் குலம் விளங்கவேண்டுமென்ற எண்ணம் வாராதா.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்—தம்மினும்
கற்றுரை நோக்கி கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று."

அன்னியரிடத்துள்ள செல்வங்களைக் குறித்து பொறுமைகொண்டு அவர்களைவிட நாம் தனவந்தர்களாக வேண்டுமென்று செல்வந் தேடுவதிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் வீணுகக் கழித்து மாண்டு

போவதைவிட, தமக்குக் கிடைத்துள்ள செல்வத்தைக் குறித்து, தம்மிலும் குறைந்த செல்வத்தையுடையவர்களைப் பார்த்து இவர்களைவிட எத்தனையோ பங்கு நாம் அதிக தனவந்தர்களாக ஈஸ்வரன் அனுக்ரகம் செய்திருக்கிறுரென்றெண்ணி, தம்மிலுங் கல்வி கேள்விகளில் தேர்ந்துள்ளவரைப்பார்த்து ஆ! இவர்கள் எவ்வளவு கல்வி நிறைந்தவர்களாகவும் சற்சனர்களாகவும் விளங்கி இருக்கிறுர்கள். நாம் இவர்களைப் மாத்திரமென்றேங்கி இவர்களைப்போல் நாமும் எப்போது சீர்படுவோமென்று அதற்குரிய சாதனங்களைத் தேடவேண்டுவதல்லவோ மானிடவியல்பு. மற்ற மரபினரெல்லாம் கல்வியும் நாகரீகமும் நிறைந்தவர்களாக விளங்குவதற்குக் காரணம் யாது. மரபின் அபிமானங்கொண்ட புண்ணியவான்கள் பலரும் கூக்குரலிட்டு, கல்வியை இருபாலாருக்கும் விர்த்தியாகும் வண்ணம் அநேக புத்தகங்கள் இடைவிடாமல் எழுதி வந்தமையால் கல்வியாளராக இருபாலாரும் விளங்குகின்றனர். ஆகவே எமது மரபினர்களே, நமது மக்கள் யாவரும் கல்வியிற்றேறவேண்டியதற்குரிய சாதனங்களைத் தேடுங்கள் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்" என்பதுபோல இதுதான் சமயம்; இது தவறிஞல் வேறு சமயமில்லை. நம்மவரில் சிலர் தற்காலம் கல்விமான்களாய் தர்மசிந்தையுடையவர்களாக விளங்குகிறுர்கள். வேண்டிய குறைகளை முடித்துக்கொள்ளுங்கள். கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் வேண்டாம். கண்ணுள்ளபோதல்லவா சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும். வெகு காலங்களாக எம்முள் கொண்டிருந்த வெண்ணமான து

தற்போது சிறிக்கொண்டு வெளிவந்துள்ளது. இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் மரபினரைப் பாதுகாக்கு நிமித்தம் தங்களால் கூடிய அளவில் பிரயத்தனஞ்செய்து முன்னுக்குக் கொண்டுவர கஷ்டமெடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கோருகிறேன். அதன்றியும் இது விஷயமாக எமது நோக்கமும் கஷ்டமும் பேரவாவும் ஒவ்வொருவரும் தங்களுடையவென எண்ணவேண்டுமெனக் கோருவதோடு அடியிற்கண்ட பாடலை வாசித்து அதிலுள்ள சாராம்சங்களைத் தெரிந்து கிரமப்படி நடப்பதுதான் உசிதம்.

"விஞ்ஞய ரருமை தன்னை விஞ்ஞைய ரறிய வேண்டும்
புஞ்செய லறிவீனர்புகழ்ந்ததை யறியா ரென்போல்
விஞ்சிய மகப்பே றுன வேதனை மலடி தானும்
கிஞ்சித மறியா ளென்போ லறிந்திடுங் கேள்வி யானே."

இதோடு "வைசியகுல சிந்தாமணி" என்னும் நூலை சீக்கிரம் வெளியாக்க எண்ணங்கொண்டு சுருக்கமாக எனதய்யன் ஞானசாரியாகிய நிரதிசயானந்த விருபாதங்களைச் சிரமேற்கொண்டு இதயத்திருத்தி நமது ஆசிரிய பீடமாயுள்ள சந்நிதானமும் நமது வைசியகுல மரபும் சீர்பெற்றோங்கி என்றுங் குறைவில்லாமல் வாழ சர்வதயாநிதியாயும் சர்வபரிபூரணனாகிய சர்வேஸ்வரனைத் துதித்து இத்துடன் நிறுத்துகிறேன். குற்றம் மரபு பொறுக்க.

சுபம்! சுபம்!